செ.வெ.எண் : 48/ஆகஸ்ட் நாள் : 24.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## கோவை தமிழ்நாடு விவசாயக் கல்லூரி அவர்களால் அறிவிக்கப்பட்ட நர்ஸிங் உதவியாளர் பணிக்காலியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

------------

பதிவாளர் கோவை தமிழ்நாடு விவசாயக் கல்லூரி அவர்களால் அறிவிக்கப்பட்ட நர்ஸிங் உதவியாளர் பணிக்காலியிடத்திற்கு சென்னை வேலைவாய்ப்புத் துறையால் மாநில அளவில் பதிவு மூப்பு பட்டியல் கோரப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட தகுதியுடைய பதிவுதாரர்கள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட உள்ளனர். கல்வித்தகுதி: எட்டாம் வகுப்பு தேர்ச்சியுடன் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவமனையில் நர்ஸிங் உதவியாளர் பயிற்சியில் தேர்ச்சி பெற்று மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். வயதுவரம்பு 30.06.2017 அன்று தாழ்த்தப்பட்ட அருந்ததியர் - தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாழ்த்தப்பட்டபழங்குடியினர்: 18 முதல் 35 வயதிற்குள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - 18 முதல் 32 வயதிற்குள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) இதர வகுப்பினர் 18 முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும்.

பிளஸ் 2 மற்றும் பட்டப்படிப்பு முடித்து பதிவு செய்தவர்களுக்கு அரசு விதிமுறைகளின்படி வயது வரம்பில் தளர்வு உண்டு. - மேற்கண்ட தகுதிகள் உடைய பதிவுதாரர்கள் நர்ஸிங் உதவியாளர் பணிக்காலியிடத்திற்கு பரிந்துரை செய்யப்பட உள்ளதால் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தங்களது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டை கல்விச்சான்றிதழ்கள், குடும்ப அடையாள அட்டை, சாதிச்சான்று ஒளிநகல்களுடன் 29.08.2017 தேதி அன்று காலை 11.00-மணிக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வருகை புரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்கண்டவாறு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்